**சுருக்கம்**

கல்லூரிக் கல்வி – சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி – மதுரை மாவட்டம், The Immaculate Conception Society சார்பில் மதுரை மாவட்டம், விரகனூர் என்னுமிடத்தில் "மடோனா கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி" என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை 2016–17–ஆம் கல்வியாண்டு முதல் துவங்குவதற்கு அனுமதி – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**உயர்கல்வித் (இ1) துறை**

அரசாணை (நிலை) எண்.131

நாள்:8.7.2016.
துன்முகி, ஆனி 24 ,
திருவள்ளுவராண்டு 2047
படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.356, உயர்கல்வித் (இ1) துறை, நாள்: 29.9.2009.
2. அரசாணை (நிலை) எண்.4, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.7.1.2011.
3. அரசு கடிதம் எண்.17861/இ1/2011–1, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.16.9.2011.
4. அரசாணை (நிலை) எண்.40, உயர்கல்வித் (இ1) துறை, நாள். 28.02.2014.
5. அரசாணை (நிலை) எண்கள். 107, 108 மற்றும் 109, உயர்கல்வித் (இ1) துறை, நாள்.14.5.2015.
6. மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரின் கடிதம் ந.க. எண்.4402/ அ 1/2015, நாள். 29.5.2015.
7. மதுரை மாவட்ட வருவாய் அலுவலரின் ஆய்வறிக்கை ந.க.எண். 22209 / 2015/விவ 2, நாள்.09.06.2015.
8. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க. எண்.42479/ ஆர் 2/2014, நாள்.3.7.2015.

**** *** ****

**ஆணை** :–

மதுரை மாவட்டம், விரகனூர் என்னுமிடத்தில் "மடோனா கலை மற்றும் அறிவியல் (மகளிர்) கல்லூரி" என்கிற பெயரில் புதிய நிதியுதவி பெறாத தனியார் சுயநிதி கல்லூரியினை 2016–17–ஆம் கல்வியாண்டில் தொடங்குவதற்கு, மதுரை மாவட்டம், The Immaculate Conception Society சார்பில் விண்ணப்பம் பெறப்பட்டு, மதுரை மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் மற்றும் மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோரின் ஆய்வறிக்கை மற்றும் பரிந்துரை பெறப்பட்டது எனவும் இக்கல்வி முகமை பின்வருவனவற்றை நிறைவு செய்துள்ளதாகவும், மேலே எட்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்குத் தெரிவித்துள்ளார்:–

1) கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் கல்வி முகமையின் பெயரில் கூட்டாக ரூ.20,00,000/– (ரூபாய் இருபது லட்சம் மட்டும்) வைப்புத்தொகை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிறுவனத்தில் இரசீது எண். RAA 274251, நாள். 16–06–2015–இல் முதலீடு செய்யப்பட்டுள்ளது.